

2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத்துக்கு மாபெரும் வெற்றியை பெற்றுத் தந்திட வேண்டும் என்ற உறுதியோடு, கழகத் தலைவர் அவர்களால் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவின் பணிகளை தொடங்கி அதன் ஒரு பகுதியாக, கழக மகளிரணி – மகளிரணி பிரச்சாரக்குழு மற்றும் மகளிர் தொண்டரணி மாநில நிர்வாகிகளை கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உட்பட தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவினர் அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினர். இந்தக்கூட்டத்தின் போது, மகளிர் அணி – மகளிரணி பிரச்சாரக்குழு – மகளிர் தொண்டரணி சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை கேட்டறிந்ததுடன், மகளிர் மேம்பாட்டுக்காக கழக அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை மகளிரிடம் அதிகளவில் எடுத்துச் செல்வது, மகளிரணி – மகளிர் தொண்டரணி சார்பில் தேர்தலுக்கான செயல் திட்டங்களை உருவாக்கி களப்பணியாற்றுவது உள்ளிட்ட அம்சங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.



2026 சட்டமன்றத் தேர்தலையொட்டி, முதலமைச்சர் அவர்கள் அமைத்துள்ள தி.மு.கழக சட்டமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழு சார்பில், தி.மு.கழக மாணவர் அணி நிர்வாகிகளுடன் அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் ஆலோசனை நடைபெற்றது. தமிழ்நாட்டு மாணவர்களின் உணர்வோடு கலந்திருக்கும் தி.மு.கழகத்தின் வெற்றியை 2026 தேர்தல் களத்திலும் உறுதிப்படுத்திட, கழக மாணவரணியினர் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து இக்கூட்டத்தில் கலந்துரையாடி கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாணவர்களின் முன்னேற்றத்துக்காக, கழக அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களையும், மாணவர்களின் உரிமைகளை பாதுகாக்க கழகம் மேற்கொண்டு வரும் பணிகளையும் மாணவ சமுதாயத்தினர் மத்தியில் எடுத்துச் செல்கின்ற அரும்பணியை கழக மாணவர் அணி மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இதில் சட்டமன்ற தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவினர் கலந்து கொண்டனர்.

## திராவிட முன்னேற்றக் கழகமும்,

# ‘திராவிட மாடல்’ அரசும் அடித்தட்டு மக்களுக்கு என்றும் துணை நிற்கும்!

## வீட்டுமனை பட்டா வழங்கும் விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**சென்னை, ஜூலை 26-**

**சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 2 ஆயிரத்து 7 குடும்பங்களுக்கான வீட்டு மனை பட்டாக்கள் வழங்கும் நிகழ்ச்சி, நீலாங்கரையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த விழாவில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு, வீட்டுமனை பட்டாக்களை வழங்கி, வாழ்த்திப் பேசினார்.**

**விழாவில், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:**

சோழிங்கநல்லூர் பகுதியைச் சேர்ந்த இரண்டாயிரம் பயனாளிகளுக்கு வீட்டு மனைக்கான பட்டாக்கள் வழங்குகின்ற இந்த சிறப்பான நிகழ்ச்சியில் பங்கேற்று, உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன்.

¬தலமைச்சர் தலைமையிலான நம் திராவிட மாடல் அரசு உங்களுக்குத் தொடர்ந்து பல்வேறு நலத்திட்டங்களை வழங்கிக் கொண்டிருக்கிறது. நம் அரசின் சாதனைகளை அங்கீகரிக்கின்ற வகையில், சமீபத்தில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 40க்கு 40 தொகுதிகளிலும் நூறு சதவிகித வெற்றியைக் கொடுத்தது. மிகப்பெரிய வெற்றியை நம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தமிழ்நாட்டு மக்கள் நீங்கள் அளித்தீர்கள். இந்த நேரத்தில் அதற்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### திராவிட மாடல் அரசு

நம் முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு, ஏழை, எளிய அடித்தட்டு மக்கள் நடுத்தர வர்க்க மக்களின் ஏற்றத்திற்காகத் தொடர்ந்து தினம், தினம் பல்வேறு திட்டங்களை அளித்து வருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகமும், நம் திராவிட மாடல் அரசும் எப்போதும் உங்களுடன் நிற்கும். அதேபோல் நீங்களும் எப்போதும் கழகத்திற்கும் நம் அரசுக்கும் பக்கபலமாக தொடர்ந்து இருந்து கொண்டு வருகிறீர்கள்.

உண்ண உணவு, உடுத்த உடை, இருக்க இடம் என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் அடிப்படை உரிமை. கலைஞர் அவர்களின் ஆட்சி காலத்திலிருந்தே உண்ண உணவு, உடுத்த உடை, இருக்க இடம் என்ற அடிப்படைத் தேவைகளைப் பார்த்து பார்த்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

### குடிசை மாற்று வாரியம்

குறிப்பாக, வீடு என்பது எல்லோருக்குமான ஒரு அத்தியாவசியமான தேவை. அது ஒரு கனவு. அதற்காகத்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1970 களிலேயே இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தைத் தொடங்கி வைத்தார்கள். இன்றைக்கு அதனை `தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்’ என்று நம் முதலமைச்சர் அவர்கள் மேம்படுத்தி இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக கட்டட அனுமதியை ஆன்லைன் மூலமாக உடனடியாகப் பெற வேண்டும் என்ற திட்டத்தையும் நேற்று முன்தினம் நம் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்திருக்கிறார்கள். வீடு எவ்வளவு முக்கியமோ அதே அளவு அந்த வீட்டிற்கான பட்டாவும் மிகமிக முக்கியம். அந்த வகையில், பார்த்தால் உங்கள் ஒவ்வொருவருக்கும் இந்த நாள் மிக மிக மகிழ்ச்சியான முக்கியமான நாள். ஏனென்றால், பட்டா வேண்டும் என்ற உங்களின் பல வருட கனவு இன்று நனவாகி இருக்கிறது.

### வாக்குறுதி கொடுத்தேன்

குறிப்பாக, சென்னையில் தேர்தல் பிரச்சாரத்தில் நான் ஈடுபட்டபோது முதலமைச்சரின் அறிவுரைப்படி உங்களுக்கெல்லாம் ஒரு வாக்குறுதி கொடுத்திருந்தேன். ‘சென்னையில் பட்டா பிரச்சினை பல வருடமாக இருக்கிறது. அப்படி பட்டா கிடைக்காமல் இருப்பவர்களுக்கு நிச்சயம் பட்டா வழங்க, நடவடிக்கை எடுக்கப்படும்’ என்ற வாக்குறுதியை தேர்தல் பிரச்சாரத்தின்போது நான் கொடுத்திருந்தேன்.



தேர்தல் முடிவுகள் வந்து இரண்டு மாத காலம் தான் ஆகி இருக்கிறது. இந்த இரண்டு மாதத்திற்குள் நம் முதலமைச்சர் அவர்கள் உங்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றி இருக்கிறார். நம் திராவிட மாடல் அரசு, பல வருடங்களாக பட்டா இல்லாமல் இருந்தவர்களுக்குக்கூட இன்று பட்டா வழங்கி இருக்கிறது.

பட்டா வழங்குவதில், பல நிர்வாகச் சிக்கல்கள் இருந்து வந்தன. ஆனால், இந்த சிக்கல்களையெல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு எடுத்துச் சென்றபோது எத்தனை சிக்கல்கள் இருந்தாலும், எத்தனை பிரச்சினைகள் இருந்தாலும், எதைப் பற்றியும் கவலைப்படாமல் மக்களின் மகிழ்ச்சிதான் முக்கியம் என்ற ஒரே குறிக்கோளோடு பணியாற்ற வேண்டும். அந்தச் சிக்கல்களையெல்லாம் தீர்க்க வேண்டும் என்று எங்களுக்கும், அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டிருந்தார்கள்.

ஏனென்றால், உங்கள் வீட்டிற்கான பட்டா என்பது உங்களின் உரிமை. அதனால்தான் இந்தப் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு பரிந்துரைகளை வழங்க, ஒரு குழுவை நம் முதலமைசர் அவர்கள் நியமித்தார்கள். அந்தக் குழு எடுத்த முயற்சியின் காரணமாக, இன்றைக்கு 28 ஆயிரத்து 848 பயனாளிகளுக்கு பட்டாக்கள் தயார் நிலையில் இருக்கின்றன. அதில் இன்று சோழிங்கநல்லூர் பகுதியில் நடக்கின்ற நிகழ்ச்சியில் கிட்டத்தட்ட 2 ஆயிரம் குடும்பங்களுக்கு பட்டாக்களை வழங்க இருக்கின்றோம்.

### மாதவரம் 2,124

நேற்று இதேபோல், ஒரு நிகழ்ச்சியில் மாதவரம் மற்றும் அதன் அருகாமையில் உள்ள பகுதிகளைச் சேர்ந்த 2 ஆயிரத்து 124 பட்டாக்களை வழங்கி இருக்கின்றோம். இதைத்தொடர்ந்து சென்னையில் உள்ள சட்டமன்றத் தொகுதிகளில், அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களின் மூலமாக தொடர்ந்து, பட்டாக்கள் வழங்கப்பட இருக்கின்றது.

நம் திராவிட மாடல் அரசின் முயற்சிகளால் இன்றைக்கு உங்கள் ஒவ்வொருவரின் கைகளிலும் வீட்டுமனை பட்டாக்கள் வந்து சேர்ந்திருக்கிறது. இவ்வளவு நாள் சொந்த வீடாக இருந்தாலும் பட்டா இல்லையே என்ற ஒரு தயக்கமும், கலக்கமும் உங்களிடம் கண்டிப்பாக இருந்திருக்கும். இனி, அந்தப் பிரச்சினை உங்களுக்கு எதுவும் கிடையாது.

### 500 கோடி பயணங்கள்

இன்றிலிருந்து உங்கள் வீட்டுமனை, வீடு சட்டப்பூர்வமாக உங்களுக்குச் சொந்தமாகி இருக்கிறது. நம் திராவிட மாடல் அரசு இன்றைக்கு எண்ணற்றத் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. மகளிருக்கு கட்டணமில்லாப் பேருந்து விடியல் பயணத் திட்டம் மூலமாக 500 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள்.

மகளிரின் சுமையைக் குறைக்கின்ற வகையில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் அறிமுகம் செய்தார்கள். இந்தத் திட்டத்தை இன்றைக்கு வெளி மாநிலங்களும் பின்பற்றிக்கொண்டிருக்கின்றன. வெளி மாநிலங்கள் மட்டுமல்லாமல், கனடா, இலங்கை போன்ற வெளிநாடுகளும் நம் திட்டங்களையெல்லாம் பின்பற்றிக் கொண்டிருக்கின்றன என்பதை நான் பெருமையாகக் கூறிக் கொள்கின்றேன்.

### 20 லட்சம் குழந்தைகள்

முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தின் மூலமாக ஒவ்வொரு நாளும் 20 லட்சம் குழந்தைகளுக்கு பள்ளிகளிலேயே தரமான காலை உணவு வழங்கப்படுகின்றது. புதுமைப்பெண் திட்டத்தின் மூலமாக அரசுப் பள்ளிகளில் படிக்கக் கூடிய மாணவிகள் உயர் கல்வி படிக்கச் செல்லும் போது 3 லட்சத்து 25 ஆயிரம் மாணவிகளுக்கு மாதம், மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத் தொகை வழங்கப்படுகின்றது.

இது எல்லாவற்றை விடவும் மிக மிக முக்கியமான திட்டம், அதுதான் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம். இந்தத் திட்டம், பெண்கள் மத்தியில் மிகப்பெரிய ஒரு வரவேற்பை பெற்று இருக்கின்றது.

இதுவரை, கிட்டத்தட்ட 1 கோடியே 18 லட்சம் மகளிருக்கு கடந்த 11 மாதங்களாக மாதம், மாதம் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் வழங்கப்பட்டிருக்கிறது. இப்படி நம் அரசு தமிழ்நாட்டையும், தமிழ்நாட்டு மக்களின் வளர்ச்சியையும் அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்கின்ற வகையில், தொடர்ந்து பலத் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

### இந்தியாவில் முதலிடம்

இந்தத் திட்டங்களை நமது முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்துகின்ற காரணத்தினால் தான் தமிழ்நாடு அரசு இன்றைக்கு வறுமை ஒழிப்பு, மகளிர் முன்னேற்றம், தரமான கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட 13 துறைகளில் இந்தியாவிலேயே நம்பர் ஒன் இடத்தைப் பிடித்திருக்கின்றது. இதை நான் சொல்லவில்லை, ஒன்றிய அரசின் நிதி ஆயோக் அமைப்பு புள்ளிவிவரத்துடன் சொல்லி இருக்கிறது.

நம் திராவிட மாடல் அரசின் சாதனைகளில் ஒன்றாகத்தான் இன்று உங்களுக்கெல்லாம் வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கிறது. நீங்கள் அனைவரும் கழக அரசின் திட்டங்களின் பயனாளிகள் மட்டுமல்ல, நீங்கள் அனைவரும் இந்த திட்டங்களின் பங்கேற்பாளர்கள்.

திராவிட மாடல் அரசின் சாதனைத் திட்டங்களையெல்லாம் நீங்கள் அனைவருக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும். இந்த அரசின் பிராண்ட் அம்பாசிடர்களாக நீங்கள் திகழ வேண்டும். உங்களுக்காக இந்த திராவிட மாடல் அரசு தொடர்ந்து உங்களுக்கும், உங்களின் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் உழைக்க தயாராக இருக்கின்றோம். எங்களை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

### பாராட்டும் நன்றியும்

இந்த பட்டாக்களைத் தயார் செய்ய இரவு பகல் பார்க்காமல் உழைத்துக் கொண்டிருக்கக்கூடிய அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் செயலாளர் தாரேஷ் அகமது ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கும் பட்டா வழங்குவதில் உள்ள சிக்கல்களை தீர்ப்பதற்காக அமைக்கப்பட்ட குழு மற்றும் அந்தக் குழுவின் சிறப்பு அதிகாரி மதுசூதனன் ரெட்டி ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கும், அனைத்து மக்கள் பிரதிநிகளுக்கும், சென்னை மாவட்ட ஆட்சியர் மற்றும் அதிகாரிகள் அலுவலர்கள் அனைவருக்கும் என் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வீட்டுமனைப் பட்டா பெற்ற அத்தனைப் பேருக்கும் மீண்டும் எனது அன்பையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.கே.எஸ். எஸ்.ராமச்சந்திரன், மா.சுப்பிரமணியன், சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் அரவிந்த் ரமேஷ், காரம்பாக்கம் கணபதி, மருத்துவர் எழிலன், பிரபாகர்ராஜா, துணை மேயர் மகேஷ்குமார், வீட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சி முருகன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் முதன்மைச் செயலாளர் அமுதா, ஐ.ஏ.எஸ்., சென்னை மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன் ஐ.ஏ.எஸ்., சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறைச் செயலாளர் மருத்துவர் தாரேஷ் அகமது ஐ.ஏ.எஸ்., நில நிர்வாக ஆணையர் கே.எஸ்.பழனிச்சாமி ஐ.ஏ.எஸ்., நில அளவை ஆணையர் மதுசூதனன் ரெட்டி ஐ.ஏ.எஸ்., சென்னை மாவட்ட ஆட்சியர் ராஷ்மி சித்தார்த் ஐ.ஏ.எஸ்., மாநகராட்சி கல்வி நிலைக்குழுத் தலைவர் பாலவாக்கம் விஸ்வநாதன், மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர்கள் எஸ்.வி.ரவிச்சந்திரன், வி.எ.மதியழகன் உள்ளிட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள், அலுவலர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் என பலரும் கலந்துகொண்டனர்.




சென்னை நீலாங்கரை ஆர்.கே.கன்வென்சன் சென்டரில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் நேற்று முன்தினம் (24.07.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பயனாளிகளுக்கு வீட்டு மனைப் பட்டாக்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வருவாய்த் துறை மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே. கே. எஸ். எஸ். ஆர். ராமச்சந்திரன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். அரவிந்த் ரமேஷ், மருத்துவர் நா. எழிலன், கா.கணபதி, ஏ.எம்.வி. பிரபாகரராஜா, மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ். முருகன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை முதன்மைச் செயலாளர் பெ. அமுதா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அரசு செயலாளர் மருத்துவர் தாரேஸ் அகமது, நில நிர்வாக ஆணையர் டாக்டர்.கே.எஸ்.பழனிசாமி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, நிலஅளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் பி. மதுசூதன் ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.